அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2022

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஐந்து

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

சுட்டெண்: ......................

**பகுதி 1 இல் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
பகுதி 11 இல் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நீர் விரும்பும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கீறிட்ட இடங்களிற்கு பொருத்தமான சொல்லை எழுதுக.

1. "விஸ்மயம்" என்ற ஸ்தாயிபாவத்தையுடைய ரஸம் ____________________ ஆகும்.

2. பரதநாட்டிய கச்சேரி உருப்படிகளில் சிகரம் போன்று அமைவது ____________________ ஆகும்.

3. இயலிசை வாரிதி என்றழைக்கப்படும் வாக்கேயகாரரின் பெயர் ____________________ ஆகும்.

4. கண்டஜாதி மட்டியதாளம் திஸ்ரகதியாகும் போது ____________________ அட்சர எண்ணிக்கையை கொண்டிருக்கும்.

5. அஷ்டபதி என்னும் உருப்படியை ____________________ இயற்றியுள்ளார்.

6. பதவர்ணங்களில் தீர்மானங்கள் (பூர்வாங்கம்) நிறைவுற்றதும் இடம்பெறும் அம்சம் ஸ்வரம் ____________________ ஆகும்.

7. இட்ட வேலையை செய்யும் ஊழியக்காரி ____________________.

8. சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் தேர்ச்சி பெற்ற நாயகனின் தோழன் ____________________ ஆவான்.

9. விஷ்ணுவை கடவுளாகக் கொண்ட ரஸம் ____________________ ஆகும்.

(ம.ப.பா)

10. தலைவனும் தலைவியும் ஒன்றுசேரும் சிருங்காரம் ______________________ ஆகும்.

11. வேத ஆகம முறைப்படி விவாகம் செய்து கொண்ட பெண்ணுடன் வாழும் நாயகன் ______________________ ஆவார்.

12. விபாவங்களின் விளைவுகள் அல்லது பலன்களே ______________________ ஆகும்.

13. கணவரின் வருகைக்காக தன்னையும், படுக்கை அறையையும் அலங்கரிக்கும் அஷ்டவித நாயகி ______________________ ஆவார்.

14. ஒருவரை ஒருவர் நேரில் காணாது காதலிப்பது ______________________ சிருங்காரம் ஆகும்.

15. |9 ◡ O இவ் அடையாளத்தை எடுத்துக்கொள்ளும் தாளம் ______________________ ஆகும்.

16. கர்வம், கோபம், தற்புகழ்ச்சி ஆகிய குணங்களை உடைய நாயகன் ______________________ ஆவார்.

17. கண் சிவத்தல், புருவம் நெரித்தல், சபதம் செய்தல் போன்ற செய்கைகளை அனுபவமாக எடுத்துக்கொள்ளும் ரஸம் ______________________ ஆகும்.

18. ஒருவரின் முயற்சி இன்றி இயல்பாகவே தோன்றக்கூடிய பாவம் ______________________ ஆகும்.

19. நாயக நாயகியை சேர்த்து வைப்பதில் வல்லமையான தோழி ______________________ ஆவார்.

20. கருணாரஸத்தின் கடவுள் ______________________ ஆவார்.

(20x1=20 புள்ளிகள்)

# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு - 2022

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஐந்து

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி இரண்டு

சுட்டெண்: ......................

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நீர் விரும்பும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அ. பரதநாட்டிய கச்சேரி அமைப்பின் இதயம் போன்ற உருப்படி யாது? (1 புள்ளிகள்)

   ஆ. வர்ணத்தின் பிரிவுகள் எத்தனை? பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)

   இ. வர்ணத்தில் இடம்பெறும் இருபகுதிகளும் எவை? (2 புள்ளிகள்)

   ஈ. சரணம், சரணஸ்வரம் எனும் அங்கங்கள் இடம்பெறும் பகுதி எது? (1 புள்ளிகள்)

   உ. நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம், சாகித்யகர்த்தா, நடன அமைப்பாளர், நாயகன் நாயகி என்பனபற்றி குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

   ஊ. நீர் கற்ற பதவர்ணத்தின் பல்லவி முடிவுற அமைந்துள்ள தீர்மானம் ஒன்றினையும், இரண்டாவது சரணஸ்வர சாகித்தியத்தையும், அதற்கான கோர்வைகளையும் தாள அங்க அறுதிக் குறியீட்டுடன் எழுதுக. (8 புள்ளிகள்)

2. சிறுகுறிப்பு எழுதுக.

   அ. பதி ஆ. வாஸகஸஜ்கிகா

   இ. உத்தீபனவிபாவம் ஈ. விப்ரலம்பசிருங்காரம் (15 புள்ளிகள்)

3. அ. அடிப்படை தாளங்கள் 7 ஐயும் தாள அங்க குறியீட்டுடன் எழுதுக.

   ஆ. ஐந்து ஜாதிகளையும் சொற்கட்டு எண்ணிக்கையுடன் எழுதுக.

   இ. ஜம்பதாளத்திற்குரியதும், அடதாளத்திற்குமுரிய ஜாதி கதி மாற்றங்களை அட்டவணைப்படுத்துக. (15 புள்ளிகள்)

4. அ. நவரஸங்களையும், அதன் ஸ்தாயிபாவங்களையும் குறிப்பிடுக.

   ஆ. விரும்பிய இரண்டு ரஸங்கள் பற்றி விரிவான விளக்கம் தருக. (15 புள்ளிகள்)

(ம.ப.பா)

5. முதிர்ச்சி, அனுபவம், வயது என்பவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படும் நாயகியின் வகைகளைக் கூறி ஒவ்வொன்றையும் விளக்குக. (15 புள்ளிகள்)

6. பிரபல நட்டுவாங்க வித்துவான்களாகிய பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை **அல்லது** வழுவூர் இராமையாபிள்ளை அவர்கள் நடனக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை தொகுத்து எழுதுக. (15 புள்ளிகள்)

7. பாவம் என்றால் என்ன? அவை எவை? அவற்றினை விரிவாக விளக்குக. (15 புள்ளிகள்)